செய்தி வெளியீடு எண் : 1458 நாள் : 22.07.2023

# மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தலைமையில் சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மண்டலங்களின் இணை இயக்குநர்கள் மற்றும் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

-----

மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் இன்று (22.07.2023) சென்னை மாநில செய்தி நிலையக் கூட்டரங்கில் சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் மண்டலங்களின் இணை இயக்குநர்கள் மற்றும் இம்மண்டலங்களுக்குட்பட்ட மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்களின் பணி ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் அவர்கள் தமது தலைமையுரையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2021-2022 மற்றும் 2022-2023 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட திட்டப்பணிகளையும், நடைபெற்று வரும் பணிகளையும் குறித்த காலத்திற்குள் முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நினைவகங்கள், அரங்கங்கள், மணிமண்டபங்கள், நினைவுத் தூண்கள் மற்றும் சிலைகள் ஆகியவற்றை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ளும்போது பழுதுகள் ஏதேனும் இருப்பின், அவற்றை உடனடியாக மாவட்ட ஆட்சியர் கவனத்திற்கும், தலைமை இடத்திற்கும் தெரிவித்து பராமரிப்புப் பணிகளை உடனடியாக செய்து முடிக்கவேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திட்டங்கள் குறித்து வெளியிடப்படும் குறும்படங்கள் மற்றும் அரசு செய்தி மலர்கள் ஆகியவற்றை மாவட்டங்களில் உள்ள திரையரங்குகளில் திரையிடப்படுகின்றனவா என்பது குறித்து ஆய்வு மேற்கொண்டு தலைமையிடத்திற்குத் தெரிவிக்க வேண்டும் எனவும், மாவட்டங்களில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் மூலம் அரசின் முக்கிய திட்டங்கள் குறித்து மக்கள் அதிகம் கூடும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள திறந்தவெளி விளம்பரங்களில் திட்டங்களின் தலைப்புடன் அத்திட்டங்களின் மூலம் பயன்பெறுவதற்கான தகுதிகளையும் குறிப்பிட வேண்டும். இதன் மூலம் பொதுமக்கள் அத்திட்டங்கள் குறித்து பயன்பெற ஏதுவாக எனவும் அறிவுறுத்தினார்.

பின்னர், தமிழரசு இதழில் அரசின் திட்டங்கள் குறித்த செய்திகள் மற்றும் போட்டித் தேர்வுகளுக்குத் தயாராகும் மாணக்கர்களுக்கு பயன்தரும் வகையில் செய்திகள் அடங்கி வெளிவருவதால் தமிழரசு இதழினை பொது மக்கள் அறிந்து சந்தா பெறும் வகையில் தெரியப்படுத்த வேண்டுமெனவும், தமிழரசு இதழின் ஆயுள் சந்தா மற்றும் ஆண்டு சந்தாக்களை அதிகம் சேர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், மேலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பங்குபெறும் நிகழ்ச்சிகளிலும், மாதந்தோறும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறும் மக்கள் தொடர்பு முகாம்

மற்றும் பிற துறைகளின் சார்பில் நடைபெறும் அரசு நிகழ்ச்சிகளிலும், தமிழரசு இதழ் சந்தா சேர்ப்பதை முன்னிலைப்படுத்தும் வகையில் சிறிய அரங்கம் அமைத்து தமிழரசு இதழ் மற்றும் சந்தா விவரங்கள் அடங்கிய பதாகைகளை காட்சிப்படுத்தியும், துண்டுப் பிரசுரங்களை பொது மக்களிடம் வழங்கி தமிழரசு இதழின் சந்தா அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மாவட்டத்திலுள்ள உள்ளாட்சி பிரதிநிதிகள், பிற துறைகளின் அலுவலர்கள், ஒப்பந்ததாரர்கள் போன்றோர்களை அணுகியும் தமிழரசு சந்தாக்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, கடந்தாண்டைப் போல எதிர்வரும் சுதந்திர தினத்தையொட்டி மாவட்டங்களிலுள்ள சுதந்திரப் போராட்ட தலைவர்களின் சிலைகளை தூய்மைப்படுத்தி மலர் மாலை அணிவித்தும், அரங்கங்கள், நினைவகங்கள், நினைவுத் தூண்கள் மற்றும் மணிமண்டபங்களை தூய்மை செய்து ஆகஸ்டு 14, 15 மற்றும் 16 ஆகிய மூன்று நாட்களுக்கு வண்ண விளக்குகளால் அலங்கரிக்க வேண்டும் என்றும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினையொட்டி மாபெரும் புகைப்படக் கண்காட்சி நடைபெறவுள்ளதால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தங்களது மாவட்டத்தில் பங்கேற்ற நிகழ்ச்சிகளின் அரிய புகைப்படங்களையும், தங்களது மாவட்டங்களிலுள்ள செய்தியாளர்களை அணுகி அவர்களிடமிருந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் அரிய புகைப்படங்களையும் சேகரித்து தலைமையிடத்திற்கு அனுப்பி வைக்குமாறும் அறிவுறுத்தினார்.

முன்னதாக, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. இரா. செல்வராஜ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையுரையாற்றினார். செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு.த.மோகன், இ.ஆ.ப. அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு), திருமதி. கி.சாந்தி, கூடுதல் இயக்குநர் (செய்தி) (மு.கூ,பொ), திரு. கு. தமிழ்செல்வராஜன், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள், பொதுப்பணித்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in